**மின்னஞ்சல் மூலம்**
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
**சென்னை–28.**

**ந.க.எண்.40032/ஆர்–1/2012** **நாள்.10.10.2022**

**சுற்றறிக்கை**

**பொருள்:** சொத்துவரி/காலிமனைவரி – 2022–23ஆம் ஆண்டு முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்தல் – 31.04.2022க்கு முன் உள்ள வரி இனங்களுக்கு வரிவிதிப்பு செய்தல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. அரசாணை(நிலை)எண்.52,53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.03.2022.
2. இவ்வலுவலக சுற்றறிக்கை எண்.40032/ஆர்1/2022,நாள்.01.04.2022.,03.08.2022 மற்றும் 12.03.2022

*******

பார்வையில் காணும் அரசாணை மற்றும் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி 2022–23ம் முதல் அரையாண்டு முதல் சொத்துவரி சீராய்வு பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, வரிவிதிப்பு செய்யப்படாத சொத்துவரி/காலிமனைவரி விதிப்பு ஆகியவற்றிற்கு மனைப்பிரிவு அனுமதிக்கப்பட்ட அரையாண்டு முதல் அல்லது அம்மனை பத்திரபதிவு செய்த அரையாண்டு முதல் /கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட அரையாண்டு முதல் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் சட்டப் பரிவு 168 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 117 A–ன் படி அதிகபட்ச ஆறு ஆண்டுகளுக்கு அதாவது பனிரெண்டு அரையாண்டிற்கும் நடப்பு அரையாண்டும் சேர்த்து 13 அரையாண்டுகளுக்கு வரிவிதிப்பு செய்யும் முறை நடைமுறையில் உள்ளது.

எனவே, அனைத்து மாநகராட்சி /நகராட்சிகளில் உள்ள சொத்துவரி / காலிமனைவரி வரி விதிப்பு செய்யும் போது 31.03.2022–க்கு முன் உள்ள அரையாண்டிற்கு ஏற்கனவே உள்ள மண்டல மதிப்பிலும் (காரணிகளில்லாமல்) 01.04.2022–லிருந்து புதிய மண்டல மதிப்பிலும் (காரணிகளை சேர்த்து) வரி விதிப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட வரி விதிப்பு வசூல் முறை இவ்வலுவலக UTIS மென்பொருளிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரமும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**நகராட்சி நிர்வாக இயக்குநர்**

**பெறுநர்**
அனைத்து நகராட்சி /மாநகராட்சி ஆணையர்கள்(சென்னை தவிர)

**நகல்**
1.அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்
2.இவ்வலுவலக கணினி திட்ட ஆராய்வாளர்/உதவியாளர்,
தொழில் நுட்ப பிரிவு.